*Tamil*

Australian Government

Fair Work OMBUDSMAN

# மொழி உதவி

ஜுலை 1, 2009 - லிருந்து ஆஸ்திரேலியப் பணியிடத் தொடர்புகள் (Australia's workplace relations laws) சட்டங்களில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

வேலை செய்யும் இடங்களில் மக்களுக்குள்ள உரிமைகள் மற்றும் கடமைகளை இச் சட்டங்கள் விளக்குகின்றன.

இம் மாற்றங்கள் பெரும்பான்மையான ஆஸ்திரேலியப் பணியிடங்களைப் பாதிக்கும்.

இந்த உரிமைகள் மற்றும் கடமைகளில் சில கீழ்வரும் விடயங்கள் குறித்ததாக இருக்கும்:

- தொழிலாளருக்குத் என்ன ஊதியம் தரப்பட வேண்டும்
- விடுமறைகளுக்கான உரிமங்கள் மற்றும் வேலை செய்யும் இடத்திலுள்ள சூழ்நிலைகள்
- வேலை தருபவர்கள் வைத்திருக்க வேண்டிய பதிவேடுகள்
- தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் வேலை இடத்தில் பிரச்சினை ஏற்பட்டால் அவர்கள் எப்படி உதவி பெறுவது
- வேற்றுமைப்படுத்தாமலிருத்தல், உதாரணத்திற்கு இனம், பால் (sex), பாலியல் நாட்டம் (sexual preference), வயது, உடல் அல்லது உளம் சார்ந்த இயலாமை, அல்லது மண நிலை (marital status) போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு வேற்றுமைப்படுத்தல்

## யாரால் உதவ இயலும்?

புதிய தேசீயப் பணியிடத் தொடர்புகள் முறையில் 2 அமைப்புக்கள் உள்ளன.

Fair Work Commission (ஆஸ்திரேலியப் பணியிட நியாயம்) மற்றும் Fair Work Ombudsman (பணியிட நியாயக் குறைகேட்பாளர்) எனும் அமைப்புக்களே இவை.

Fair Work Commission என்பது தேசீய அளவிலான பணியிடத் தொடர்புகளுக்கான முறைமன்றம் (tribunal) ஆகும். கீழ்வரும் விடயங்கள் தொடர்பான பலவேறு செயல்களை ஆற்றுவதற்கான அதிகாரம் கொண்ட, சுதந்திரமாய்த் தனித்து இயங்கும் அமைப்பாகும் இது.

- குறைந்தபட்ச ஊதியங்கள் மற்றும் பணியிடச் சூழ்நிலைகள் ஆகியவற்றிற்கான பாதுகாப்பு முறை
- தொழிலாளர்-முதலாளி பேரம், ஒப்பந்தம் (enterprise bargaining)
- தொழில்சார்-உற்பத்திக் குறைப்பு நடவடிக்கை (industrial action)
- சச்சரவுத் தீர்வு
- வேலையை விட்டு நிறுத்தல்
- இதர பணியிட விவகாரங்கள்

Fair Work Ombudsman எனும் அமைப்பு:

- ஆஸ்திரேலியப் பணியிடச் சட்டங்கள் (Australian workplace laws) குறித்து ஆலோசனை மற்றும் கல்வியறிவு வழங்குகிறது
- தேசீயப் பணியிடச் சட்டங்கள் பின்பற்றப்படுவதைக் கண்காணிக்கிறது, மற்றும் இச் சட்டங்கள் மீறப்படும் தருணங்களில் அவற்றை ஆய்வு செய்கிறது
- பணியிட உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்த தகவல்களை வெளியிடுகிறது
- சிறு தொழில்களுக்குத் தேவைப்படும் தகவல்கள் மற்றும் உபகரணங்களை வழங்குகிறது.

## மேலதிகத் தகவல் தேவையா?

- 13 13 94 எனும் தகவல் இணைப்பு இலக்கத்தின் மூலம் Fair Work (பணியிட நியாயம்) அமைப்புடன் தொடர்பு கொள்ளுங்கள்.
- மொழிபெயர்ப்புகளுக்காக 'மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை'**(Translating and Interpreting Service (TIS))**யினை **131 450** எனும் இலக்கத்தில் உள்ளூர்த் தொலைபேசிக் கட்டணத்திற்கு நாள் ஒன்றிற்கு 24 மணி நேரமும், வாரம் 7 நாட்களும் அழைக்கலாம்.



Fair Work Ombudsman எனப்படும் குறை கேட்குனர், அவர் தாம் தரும் அறிவுரைகளை, நீங்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய முறையில் அமையத், தன்னை அர்ப்பணித்துள்ளார். இந்தத் தரவுத் தாளில் (fact sheet) அடங்கியுள்ள தகவல்கள் பொதுவானவை. உங்கள் நிலையில் இது எவ்வாறு பொருந்தும் என்பதையிட்டுத் தெளிவில்லாவிடின், எமது தகவல் இணைப்பை (infoline) 13 13 94 அழைக்கலாம். அல்லது ஒரு சங்கத்துடனோ, கைத்தொழில் சங்கத்துடனோ அல்லது வேலைத்தளச் சிறப்புத் தொடர்பாளருடனோ பேசவும்.

**Last updated:** December 2013
© Copyright Fair Work Ombudsman
FWOFSTA1.02